**DVC.NO. 1/2023 PW-1**

நாள் : 16.04.2024

பெயர் : முபினா

க/பெ :அலி ஹீசைன்

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களுக்கும் முதலாம் பிரதிவாதிக்கும் நடைபெற்ற திருமணம் இருவீட்டார் குடும்ப சூழ்நிலை மற்றும் பொருளாதார நிலை தெரிந்து தான் நடைபெற்றது என்றால் ஆமாம். உங்களுடைய கணவரின் உடல்நிலை உங்களுக்கு தெரிந்து தான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் ஆமாம். அவர் மாற்றுதிறனாளி என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதி காஞ்சிபுரத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் திருமணம் சமயத்தில் இங்கு தான் இருந்தார் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து தான் அவர் காஞ்சிபுரம் சென்றார். திருமணத்திற்கு பிறகு நீங்களும் உங்கள் கணவரும் மாமனார் மாமியார் உட்பட நாத்தனார் உடன் தான் இருந்து வந்தீர்கள் என்றால் ஆமாம். வீட்டில் இருக்க கூடிய ஒரு நாத்தனாருக்கு திருமணம் ஆகவில்லை அவரும் ஒரு மாற்றுதிறனாளி என்றால் ஆமாம்.

நீங்களும் உங்களுடைய கணவரும் தனியாக வசிக்க வேண்டும் என்று சொல்லி குடும்பத்தில் முடிவெடுக்கப்பட்டதா என்றால் இல்லை. உங்களுடைய மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாத சூழ்நிலையில் சிகிச்சைக்காக அவர் வெளியூர் சென்றிருந்த சமயம் உங்களை உங்களுடைய வீட்டிற்கு சிறிது காலம் தங்கியிருக்குமாறு உங்கள் கணவர் வீட்டார் உங்களை அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய இரண்டாவது குழந்தை எப்போது பிறந்தது என்றால் 2021 ல் பிறந்தது.

இரண்டாவது குழந்தை பிறந்த பின்பு தான் உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு நீங்கள் உங்கள் கணவர் வீட்டில் இருந்து வெளியே வந்துவிட்டிர்கள் என்றால் இல்லை. என்னுடைய இரண்டாவது மகள் கருவில் இருந்த சமயத்திலேயே எனக்கும் என் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. ராணிபேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் திருமணத்திற்கு பிறகு கணவர் வீட்டில் இருந்து வெளியே வந்த இடைப்பட்ட காலத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேனா என்றால் ஆமாம். புகாரை பார்த்தால் சம்பவம் குறித்த உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் ஆமாம். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில் அல்லாத சங்கதிகள் வழக்கின் புகார் மனுவில் சொல்லபட்டிருந்தால் அது தவறு.

**(குறுக்கு விசாரணை தொடர்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**